பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 20 | வெள்ளிக்கிழமை | 05.01.2024 | அதிர்வு 157

## யாழில் ரணிலுக்கு எதிராகப் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

வடக்குக்கு 4 நாள் விஜயம்

05

# 2025 இற்கு முன்னர் மீள்குடியேற்றத்தை முழுமையாக நிறைவு செய்ய வேண்டும்

## யாழில் வைத்து அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

+ காணாமல்போனோரைத் தேடும் பணிகள் துரிதப்படுத்தப்படும்
+ வடக்கின் காணிப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு
+ முதலீடுகள் செய்யப் புலம்பெயர்ந்தோர் முன்வரவேண்டும்
+ தைப்பொங்கல் கொண்டாட்டத்தின் பின்னர் அரச ஊழியர்களுக்குச் சலுகை



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

2025 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியமர்த்தும் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தினார்.

04

# கில்மிஷாவுக்கு ஜனாதிபதி நேரில் பாராட்டு




இந்தியாவின் ஸீ தமிழ் தொலைக்காட்சி நடத்திய ‘சரிகமப லிட்டில் சம்பியன்’ இசைப் போட்டியில் பங்கேற்று வெற்றி மகுடம் சூடிய ஈழத்து இசைக்குயில் கில்மிஷா உதயசீலனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் சந்தித்துப் பாராட்டி மதிப்பளித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி, மாலை கில்மிஷாவை நேரில் அழைத்து பாராட்டிக் கலந்துரையாடினார்.

நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக கிஷ்மிஷா இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். நாடு திரும்பிய பின்னர் கொழும்பில் வந்து தன்னைச் சந்திக்குமாறு கில்மிஷாவுக்கு இதன்போது ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

# இலங்கையில் இருந்து கடத்திச் சென்ற 7 கிலோ தங்கம் தமிழகத்தில் சிக்கியது



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட 7 கிலோகிராம் தங்கக் கட்டிகள் இந்தியாவின் சுங்கத் துறை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தமிழகம், இராமேஸ்வரம் – தங்கச்சிமடம் துறைமுகப்

05



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருகோணமலையில் ஏற்பாடு செய்திருக்கும் ‘பொங்கல் விழா’ அல்லது ‘கலாசார விழா’ நாளை தொடங்குகின்றது.

ஆயினும், தமிழ்த் தேசிய மட்டத்தில் அதற்கு அங்கு எதிர்ப்பும் ஆட்சேபமும் இருப்பதாகத் தெரிகின்றது.

இது தொடர்பில் திருகோணமலையில் செயற்பட்டு வரும் ‘இராவணசேனை’

06





# யாழ். மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி ரணில் தலைமையில் விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம்

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களின் விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது.

இதில் பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்த்தன, தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வடக்கு மாகாணத்துக்கான ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் எம்.இளங்கோவன், ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, ஜனாதிபதியின் சமூக அலுவல்கள் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபாவதி கேதீஸ்வரன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.















# போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை: மின்சார சபை எச்சரிக்கை

“மின்சார சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் போராட்டத்தில் ஈடுபடும் மின்சார சபை ஊழியர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள மறுசீரமைப்பு சட்டமூலத்தை மீளப்பெற வேண்டிய தேவை கிடையாது.”

– இவ்வாறு மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நொயல் பியன்த தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்துக்கு எதிராக மின்சார சேவை சங்கத்தினர் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

மின்சார சபை மறுசீரமைக்கப்பட வேண்டும், மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என இவர்கள்தான் ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள்.

தற்போது எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். வர்த்தமானி மற்றும் சுற்றறிக்கைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடும் ஊழியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.” – என்றார்.

# நாட்டைப் பற்றிச் சிந்திக்கும் பயணத்தில் அனைவரும் ஒன்றிணைவோம் வாருங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு



“தங்களை விட மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய இந்த பயணத்தில் அனைவரும் ஒன்றிணைவோம்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாஸ்ரித திசேரா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்ட நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“வரப்பிரசாதங்கள், சிறப்புரிமைகள், சலுகைகள், தனிப்பட்ட நன்மைகள், அதிகாரப் பதவிகள் மற்றும் அரசியல் பங்குகளின் அடிப்படையிலான அரசியல் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதை ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் முற்றாக நிராகரித்துள்ளன.

இவ்வாறு சேரும் அனைவரும் நிபந்தனையற்ற உன்னத அறிவொளி அரசியலை நடைமுறைப்படுத்தவே ஒன்றிணைகின்றனர்.

இந்த நாட்டில் நடந்து வந்த, நடந்துவருகிற அரசியல் கட்சித் தாவல்களை தூக்கியெறிந்து, “தங்களுக்கு முன் நாடும், தங்களுக்கு முன் மக்களும்’ என்ற உன்னத கருத்தின் அடிப்படையில் குடும்பவாதமற்ற, மக்கள் வாதத்தைக் கொண்ட அரசியல் கொள்கை ரீதியான பயணத்தை மேற்கொள்வதற்காகவே இந்தக் கூட்டணி அமைக்கப்படும்.

மனிதாபிமான முதலாளித்துவம், நீதி, நியாயத்தை நிறைவேற்றும் சமூக ஜனநாயகம் எனும் இரண்டு பாதைகளின் ஊடாக ஒரு சீரான நடுநிலையான பாதையில் பயணித்து வருகிறது.

இது சலுகைகள், வரப்பிரசாதங்களை பெறும் ரம்மியமான பயணமன்றி, கடினமான பயணம். தங்களை விட மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டிய இந்த பயணத்தில் அனைவரும் ஒன்றிணைவோம்.” என்றார்.






# மரண அறிவித்தல்



மண்ணில்
04.04.1951

விண்ணில்
03.01.2024

## யோசப் ஜெயராஜன் (ராஜன்)

**ஓய்வுபெற்ற புனித வளனர் கத்தோலிக்க அச்சக ஒப்புநோக்குநர்**

தெகிவளையைப் பிறப்பிடமாகவும், இல. 65/23, மேற்கு ஒழுங்கை, மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் ஜெயராஜன் (ராஜன்) அவர்கள் கடந்த (03.01.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வி.எம். யோசப், ஜேற்றூட் சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் றெஜினம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், மேரி சறோஜா (ஜெயா)வின் அன்புக் கணவரும், கஜானி (லண்டன்), யூட்டனிஸ்ரன் (ஆசிரியர் – மு/அம்பகாமம் அ.த.க. பாடசாலை), நிஜானி (சிற்றி மெடிக்கல்ஸ் – யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மினோஜ் (லண்டன்), ரட்ணகுமார் (சனா கூலிங் இஞ்சினியரிங்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லஜிஸ்ரன் (லண்டன்), ஷகிஸ்ரன் (லண்டன்), ரடிஸ்ரன் (லண்டன்), றியா றோஷின் ஆகியோரின் பாசமிகு பேரனும், அன்ரன் (கனடா), ஜெயசீலன் (கனடா), ஜெயானந்தா (யோசப் மாஸ்ரர் – முன்னாள் ஆசிரியர் – புனித மாட்டீனார் குருமடம்), அருட்சகோதரி பிரான்சிஸ் (திருக்குடும்பக் கன்னியர் சபை – யாழ்ப்பாணம்), ஜெயக்குமார் (கனடா), யோசப்பின் (இளைப்பாறிய ஆசிரியர் – யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மேரி ஜெசிந்தா (ஜீவா – செட்டிகுளம்), மெட்டில்டா (அற்புதம் – செட்டிகுளம்), மேரி பற்றீசியா (ஓய்வுபெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்), மேரி அன்ரனிற்றா (ஆசிரியர் – வட இந்து மகளிர் கல்லூரி – பருத்தித்துறை), அக்னஸ்மாலினி, நிக்சன் சுரேஷ் (ஆர்.டி.ஏ. – செட்டிகுளம்), காலஞ்சென்ற சுபோதினி மற்றும் சுபாஸ்கரன் (கட்டார்), யோண் சுரேந்திரன் (லின்சன்ற் வீரபுரம்), காலஞ்சென்ற வரதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஜெயசீலி (கனடா), நீற்றா ஜெயராணி (கனடா), காலஞ்சென்ற சுலோஜனா, வசந்தி (கனடா), ஜெபரட்ணம் (இளைப்பாறிய உப அதிபர் – திரு இருதயக் கல்லூரி – கரவெட்டி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர், செல்வராஜ், இராசலிங்கம் மற்றும் அல்பிரட், அரியரஞ்சன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் – சக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை), மறைவாணன் (பிரதம தபாலகம் – யாழ்ப்பாணம்), அமுதா, அனித்தா, சுபா (ஆசிரியர் – வீரமாணிக்கம் குளம் திருமகள் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (05.01.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 65/23,
மேற்கு ஒழுங்கை,
மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்
0763325624**

## 2025இற்கு முன்னர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் எனத் தான் அறிகின்றார் எனவும், இம்முறை தைப்பொங்கல் கொண்டாட்டத்தின் பின்னர் அரச ஊழியர்களுக்கு ஓரளவான பொருளாதார நிவாரணங்கள் கிடைக்கப் பெறும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திய பின்னர் மக்களுக்குப் பொருளாதார நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்த்திருத்தின் காரணமாக நிலுவையிலிருந்து அனைத்துப் பத்திரங்களும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன என்றும், அடுத்த நான்கு காலாண்டுகளில் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேபோல், இவ்வருட இறுதிக்குள் பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3% ஆக மேம்படுத்தவும், 2025 ஆம் ஆண்டில் 5% ஆக அதிகரித்துக்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களின் விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டளவில் இடம்பெயர்ந்தவர்கள் என எவரும் இலங்கைக்குள் இருக்கக் கூடாது என்றும், அவர்களுக்கு அவசியமான வசதிகளைப் பெற்றுக்கொடுத்து அவர்களின் உயிர்வாழும் உரிமையை உறுதிப்படுத்துமாறும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 1788 பேர் காணாமல் போயிருப்பதாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதோடு அவற்றில் 1289 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 500 இற்குக் கிட்டிய முறைப்பாடுகளை விரைவில் விசாரணை செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய ஜனாதிபதி அடுத்த ஆறு மாதங்களுக்குள் அந்த பணிகளை நிறைவு செய்து காணாமல்போனோர் அலுவலகத்துடன் தொடர்புபட்டு செயற்படுமாறும் அறிவுறுத்தினார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அரசியல் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் ஒன்றுகூடியிருந்த மேற்படி கூட்டத்தில் மாவட்டத்துக்குள் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டிருக்கும் திட்டங்கள் மற்றும் அது தொடர்பில் எழுந்திருக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மீள் குடியமர்த்தல், கல்வி, சுகாதாரம், காணி, மீன்பிடி, விவசாயம் மற்றும் வனப் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகள் தொடர்பிலும் வழக்கின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது விசேட கவனம் செலுத்தினார்.

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு அவசியமான திட்டமிடலைத் தயாரித்து துரித அபிவிருத்திக்கான பயணத்தில் இணைந்துகொள்ளுமாறு வடக்கு மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் அழைப்பு விடுத்த ஜனாதிபதி, நாட்டின் பொருளதாரத்தை மீட்கும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

புதிய பொருளாதார ஆணைக்கு ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் எவர் வேண்டுமானாலும் நாட்டுக்குள் முதலீடுகளை மேற்கொள்ள முடியும் என்றும், வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ளவர்களுக்கு அதற்கான அழைப்பை விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கின் வலுசக்தியை பாதுகாத்து வலுசக்தி ஏற்றுமதி செய்வதற்கு அவசியமான அனைத்து திட்டமிடல்களும் காணப்படுகின்றன என்றும், பூநகரியை வலுசக்தி கேந்திர நிலையமாக மாற்றுவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

வடக்கின் விவசாயத்துறையை விவசாய நவீனமயப்படுத்தலுக்குள் உள்வாங்கி அதிலிருந்து பெறப்படும் பலன்களை இரட்டிப்பாக்கிகொள்ள எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் காணி விடுப்பு செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பலாலி விமான நிலையம் மற்றும் பாதுகாப்பு துறைக்கு தேவையான காணிகள் தொடர்பில் பெப்ரவரி மாதமளவில் இறுதி தீர்மானத்தை

05▶

## இலங்கையில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதிக்கு இலங்கையில் இருந்து தங்கக் கட்டிகள் கடத்தி வரப்பட்டுள்ளன என்று சுங்கத்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் தங்கச்சிமடம் தர்கா பஸ் நிலையம் அருகே மோட்டார் சைக்கிள் ஒன்றில் தங்கக் கட்டிகளைக் கொண்டு சென்ற ஒருவரைச் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தபோது அவரிடம் இருந்து 7 கிலோகிராம் தங்கத்தை மீட்டனர்.

தங்கத்தைக் கடத்திச் சென்ற நபர், மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுத் தப்பிச் சென்றதால் தீவிரமாகத் தேடுதல் வேட்டை இடம்பெறுகின்றது.

## யாழில் ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வருகையையொட்டி யாழ். மாவட்ட செயலக சூழலில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டு இருந்த நிலையிலும், மாவட்ட செயலகத்துக்கு அருகில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மூவர் கைது செய்யப்பட்ட போதிலும் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, இந்தப் போராட்டத்துக்குத் தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் யாழ். நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் போது , ஜனநாயக ரீதியான போராட்டத்துக்குத் தடை விதிக்க முடியாது எனத் தடை கோரிய மனு நேற்றுமுன்தினம் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 2025இற்கு முன்னர்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எடுப்பதாகவும் அறிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்று காணிப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

வடக்கின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கான இரு திட்டங்களுக்கு இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், இதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டங்களுக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த கொடுப்பனவுகளை பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.


# இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
# இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
# இணைந்து



## "தாயகஒலி" பிரதம ஆசிரியர்

*தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)*

## (அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

# சிறுகதைப் போட்டி

இருபிரிவுகளாக நடத்தப்படும்

(பரிசுத் தொகை 1 இலட்சம்)

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.

* நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

*அனுப்ப வேண்டிய முகவரி :*

இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைப்பு ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. அதில் உள்ள விடயங்கள் கவனிக்கப்பட வேண்டியவை.

இந்த 'இராவணசேனை' அமைப்புப் போன்றவற்றை ஆளுநர் தொண்டமான் தன் அணியில் சேர்த்துக் கொண்டிருப்பாராயின் திருகோணமலையில் தன் ஆளுநர் பதவிக் காலத்தில் அவர் சில வரலாற்று முத்திரைகளைப் பதித்துச் செல்ல வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் நினைக்கிறேன். இப்போதும் கூட, இந்த விடயத்தில் பிந்தி விட்டாலும், எதிர்கால விவகாரங்களில் மண்ணின் மைந்தர்களை – இளைஞர்களை – அரவணைப்பது ஆளுநரின் எண்ணங்களையும் செயற்பாட்டையும் மேலும் மேம்படுத்தி, நேர்வழிப்படுத்தி நியாயப்படுத்தவும் செய்யும் என நினைக்கிறேன்.

இனி, இராணவசேனையின் அறிக்கையைத் தருகிறேன்:–

திருகோணமலையில் கடந்த காலங்களில் 'தைப்பொங்கல் விழா' எனும் எழுச்சி நிகழ்வை முன்னெடுத்து வந்த இராவணசேனை மற்றும் இணைந்து செயற்படும் பொது அமைப்புகள் கிழக்கு மாகாண ஆளுநரின் கலாசாரப் பொங்கலைப் புறக்கணிக்கின்றன.

திருக்கோணமலை மாவட்டத்தின் பண்பாட்டை நிலைநிறுத்தும் வகையிலும், திருக்கோணமலையில் செயற்படும் அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயற்பாட்டை உறுதிப்படுத்தும் வகையிலும் கடந்த 10 ஆண்டுகளாக தைப்பொங்கல் விழா முன்னெடுக்கப்பட்டுவந்தது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளை மையப்படுத்தி இப்பொங்கல் விழாக்கள் இந்த மண்ணின் பிரச்சினைகளை நிலைநிறுத்தி, எதிர்கொள்ளும் சவால்களை வெளிப்படுத்தும் நிகழ்வுகளாக நடைபெற்றது.

அந்தவகையில் இவ்வாண்டு வடக்கு கிழக்கு மாகாணத்தில் கால்நடை வளர்ப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை கருத்தில்கொண்டு, 'உழவர்களின் தோழனான கால்நடைகளைக் காப்போம்!' எனும் தொனிப்பொருளில் பொங்கல் விழாவை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்தோம்.

இருந்தும், கிழக்குமாகாண ஆளுநர் தைப்பொங்கல் விழாவைப் பெரும் எடுப்பில் செய்யவிருப்பதை அறிவித்தார். இந்நிகழ்வுதொடர்பாககடந்த02.12.2023 அன்று திருகோணமலையின் சில அமைப்புகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. அக்கலந்துரையாடலில் ஆளுநர் முன்வைத்த 07.01.2024 எனும் திகதியில் பொங்கல் நிகழ்வைச் செய்யமுடியாது என்பதை அக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அமைப்புகள் சில வலியுறுத்தியிருந்தும் அதில் எந்த வித மாற்றத்தையும் ஆளுநர் செய்யவில்லை.

தைமாதம் பிறக்காத நிலையில் பொங்கல் விழா கொண்டாடமுடியாது என்றும், அது மரபுகளுக்குப் புறம்பானது என்று எழுத்துமூலம் அறிவித்தும் இருந்தோம். அத்துடன் சமூக வலைத்தளங்களில் மார்கழியில் தைப்பொங்கல் விழா நடத்துதல் தவறான முன்னுதாரணமாக அமையும் எனப் பலரும் தமது கண்டனங்களைப் பதிவுசெய்திருந்தனர்.

எதிர்ப்பை உணர்ந்த ஏற்பாட்டாளர்கள் 'தைப்பொங்கல் விழா' எனத் திட்டமிட்ட பெயரை 'கலாசாரவிழா' என மாற்றி, இது பொங்கல்விழா அல்ல எனும் ஒரு பொய்ப்பிரச்சராத்தை மேற்கொண்டு, தாங்கள் திட்டமிட்ட திகதியில் எந்த ஒரு மாற்றத்தையும் செய்யாது தொடர்ந்தனர்.

திகதிமாற்றம்தொடர்பாக02.01.2024 அன்று ஆளுநர் செயலகத்தில் நடந்த சந்திப்பிலும் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலான 06.01.2024 அன்று தொடங்குவதில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை.

ஒவ்வொரு மாத்திலும் செய்யும் விழாக்களுக்கும் சிறப்புபெயர்கள் உண்டு. அதற்கான பாரம்பரியம் மிக்க காரணங்களும், விஞ்ஞாரீதியான விளக்கங்களும் உண்டு. ஆனால் தமது தனிப்பட்ட தேவைக்காக, வசதிக்காக விழாக்களின் பெயர்களை மாற்றுதல், காலத்தை மாற்றுதல், மரபுக்குப் புறம்பாகச் செயற்படல் என்பன இனத்திற்கும், சமயத்திற்கும் செய்யும் துரோகங்களாகும்.

தை 15 இல்லங்கள் தோறும் மக்கள் குதுகலமாகப் பொங்கல் செய்யும்நாள், தை 16 மாடுகளைப் பூசிக்கும் மாட்டுப் பொங்கலுமாகும். ஆதலால் குறித்த இரு நாள்களும் பொதுநிகழ்வுகளுக்கு அழைத்தல் முறையாகாது. இந்த நாழ்ல்களுக்குப் பின் தைப்பூசம் வரையான நாள்களிலேயே தமிழர்கள் தைப்பொங்கல் விழாவை பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் நாள்களாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். இவை ஒரு சில நாள்கள் மற்றும் வாரங்கள் வரை நீடிக்கின்றன. இவையே 'தைப்பொங்கல்' விழாக்குரிய காலமுமாகும்.

இந்தப் பாரம்பரியத்தை உடைக்கும் எந்த நிகழ்வுகளுக்கும் நாம் ஆதரவு வழங்கப்போவதில்லை. பிரமாண்டங்கள் பண்பாட்டைச் சிதைப்பனவாக இருக்குமாயின் ஒருபோதும் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதையும் ஆணித்தரமாகத் தெரிவிக்கின்றோம்.

எதிர்காலத்தில் திருகோணமலையில் உள்ள அரசியல் தலைவர்கள், அமைப்புகள், சமயப்பெரியோர், ஆலயங்களின் தலைவர்கள், எழுத்தாளர்கள் என அனைவரும் கரிசனை கொண்டு ஆரம்பத்திலேயே இது போன்ற பண்பாட்டுச் சிதைவினைக் கிள்ளியெறியவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம். – என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே பறிபோய்க் கொண்டிருக்கும் திருகோணமலை மண்ணில் தமிழர்களின் கலை, கலாசாரப் பெருமைகளை உரத்துச் சொல்லும் கலாசாரப் பெருவிழாவை பெருத்த எடுப்பில் நடத்துவது என்பது இனவுணர்வுக்கு உயிரூட்டும் பெருமைமிகு ஓர் எழுச்சித் திருவிழாதான்.

ஆயினும் இராவணசேனை சுட்டுவது போல பிரமாண்டங்கள் பண்பாட்டைச் சிதைப்பனவாகவும் மாறி விடாமல் இருப்பதும் முக்கியம்.

திருகோணமலையின் சைவ, தமிழ் அறிஞர்களும், மூத்த பிரஜைகளும் நேரத்துடன் தலையிட்டு வழிகாட்டியிருக்கலாம்.

கிழக்குக்குத் தமிழர் ஒருவர் ஆளுநராகக் கிடைத்திருக்கின்றார். அதன் பலன் தமிழ் மண்ணுக்கும் தமிழினத்துக்கும் கிடைப்பதுதான் சரியானதாக இருக்கும். அதற்காகச் சிந்தித்து ஒன்றுபட்டுச் செயற்படுவோம்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலின் மற்றொரு பலூன்

பந்தா அறிவிப்புக்களை - ஆரவாரங்களை - பெரும் எடுப்பாக வெளியிடுவதில் அரசியல்வாதிகளுக்கு நிகர் எவருமில்லை என்பது தெரிந்த விடயம்தான்.

இதில் நமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அசகாய சூரர். சாத்தியமாகுமா, நடக்குமா, செய்ய முடியுமா என்பவை பற்றியெல்லாம் சிந்திக்காமல் அறிவிப்புகளை விடுப்பார் அவர். நாட்டு மக்கள் பார்த்துப் புளித்துப்போன விவகாரம் இது.

2022 ஜூலையில் ஜனாதிபதிப் பதவிக்கு வந்தார் அவர். வந்து சில மாதங்களில் திடுதிப்பென ஓர் அறிவிப்பை விடுத்தார். அதிலிருந்து இரண்டு, மூன்று மாதங்களில் இலங்கை சுதந்திரமடைந்து 75 ஆவது ஆண்டு நிறைவு தினம் 2023 பெப்ரவரி 4 ஆம் திகதி வரவிருந்தது. அதற்கு முன்னர் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் தொடர்பாக ஒரு முடிவு எட்டப்பட வேண்டும் என்று அறிவுறுத்தல் விடுத்தார். அதற்காக ஏதேதோ செய்யப் போகின்றவர் போலவும் ஆரவாரங்கள் காட்டினார். ஆனால் கடைசியில் ஒன்றும் நடக்கவில்லை. அடுத்த சுதந்திர தினமும் இன்னும் ஒரு மாதத்தில் வரப்போகின்றது.

இப்போது புதிய நாடாளுமன்றம் கூடி, ஒரு வருடத்துக்குள் தீர்வு என்கிறார் அவர். அதற்கு சில சமயங்களில் இன்னும் இரண்டரை வருடங்கள் கூட ஆகலாம். அப்போதும் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வு வருமா என்பது நிச்சயமில்லை.

இப்போது நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து இதே பாணியில் பிறிதொரு அறிவிப்பை விடுத்திருக்கின்றார் அவர்.

அடுத்த ஆண்டு பிறக்கும்போது நாட்டில் இடம்பெயர்ந்தோர் பிரச்சினை இருக்கக் கூடாது என அவர் உத்தரவிட்டிருக்கின்றாராம்.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றும் பிரச்சினைக்கு தீர்வு காண அவசர வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்திருக்கிறார் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழமையான அவசரக் குடுக்கை அறிக்கைதான் - அறிவிப்புத்தான் - இதுவும். மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் தந்திர அறிவிப்பு.

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களைப் படையினரும் பௌத்த - சிங்கள ஆட்சி பீடத்தின் கட்டமைப்புகளும் ஆக்கிரமித்து நிற்கின்றன. அதனால் இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீளக் குடியேறக் காத்திருக்கின்றனர். அவர்கள் தத்தமது பூர்வீக நிலங்களுக்கு திரும்பினால்தான் இடம்பெயர்ந்தோர் பிரச்சினை தீரும்.

அப்படியானால் முதலில் படைத் தரப்பும், அரசின் ஏனைய கட்டமைப்புகளும் பல்வேறு தேவைகள், நியாயங்களின் பெயரில் தாம் ஆக்கிரமித்து நிற்கின்ற தமிழர் தாயக நிலங்களை விடுவிக்க வேண்டும். அங்கிருந்து இடம்பெயர்ந்திருக்கும் மக்களை மீண்டும் அவரவர்களது இடங்களில் மீளக் குடியேற அனுமதியும் வசதியும் செய்யப்பட வேண்டும்.

இவை நடந்தால்தான் இடம்பெயர்ந்தோர் என்ற பிரச்சினை இல்லாமல் போகும். அது இல்லாமல் போவதாயின் முதலில் ஆக்கிரமிப்பு நிலங்களைவிடுவிக்க அரசு உறுதியுடன்தயாராக வேண்டும். அதற்கு ரணிலின் அரசு தயாரா என்பதுதான் முதல் கேள்வி.

வரும் அக்டோபர் 16 ஆம் திகதிக்கு முன்னர் அடுத்த ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதாவது இன்னும் பத்து மாதங்கள்தான் தற்போதைய ஜனாதிபதி ரணிலின் இந்தப் பதவிக்காலம். அதற்குப் பின்னரும் அவரே ஜனாதிபதியா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

அடுத்த 10 மாதங்களுக்குள் இடம்பெயர்ந்தோர் பிரச்சினையை இல்லாமலாக்குவது என்பது இயலாத காரியம் அல்ல. ஆனால் அதனைச் செயவிக்கக் கூடிய அரசியல் துணிச்சல், திடசங்கற்பம், உறுதி என்பன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ளனவா என்பதுதான் கேள்வி.

தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற இந்த ஒன்றரை வருட காலத்தில் இப்படி பல பலூன்களை அவர் அவ்வப்போது பறக்க விட்டே வந்துள்ளார். அவற்றைநாமும்இப்பத்தியிலேபலசமயங்களில் சுட்டிக்காட்டி வந்துள்ளாம்.

அந்த வரிசையில் மற்றொரு பலூன்தான் இடம்பெயர்ந்தோர் பிரச்சினைக்கு இந்த ஆண்டுக்குள் முழுமையான தீர்வு என்ற அவரின் அறிவிப்பும்.

# வெள்ள நிவாரணத் தொகையை மத்திய அரசு இதுவரை தரவில்லை

## - முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு

“தமிழக அரசு கோரியுள்ள வெள்ள நிவாரணத் தொகையை உடனடியாக ஒதுக்கீடு செய்ய வலியுறுத்துவதற்கு அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவைச் சந்திக்க நேரம் கோரியுள்ளனர்”

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

”தமிழகத்தில் கடந்த டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த இந்த இரண்டு மிகப் பெரிய இயற்கைப் பேரிடர்களுக்கும் மத்திய அரசிடமிருந்து நிவாரணத் தொகையாக தமிழக அரசு மொத்தம் 37,907.19 கோடி ரூபா ஏற்கெனவே கோரியுள்ளது.

மிக்ஜாம் புயலினால் சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் ஏற்பட்ட கடுமையான பாதிப்புகளைப் பார்வையிட மத்திய குழுவினர் டிசம்பர் 12 மற்றும் 13 திகதிகளில் வந்து பார்வையிட்டுச் சென்றனர்.

அதேபோன்று, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் அதிகனமழை காரணமாக ஏற்பட்ட பெருத்த பாதிப்புகளை மத்தியக் குழுவினர் கடந்த மாதம் 20 ஆம் திகதி நேரில் பார்வையிட்டனர்

இதுமட்டுமின்றி, மத்திய நிதிய



மைச்சர் நிர்மலா சீதாராமனும் கடந்த மாதம் 26 ஆம் திகதி அன்று தூத்துக்குடி மாவட்டத்திற்குச் சென்று, வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்தார். மேலும், பிரதமர் நரேந்திர மோடி 2 ஆம் திகதி தமிழகத்துக்கு வருகை தந்து, திருச்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையில், தமிழகத்தில் ஏற்பட்ட புயல், வெள்ள பாதிப்புகள் தொடர்பாக குறிப்பிட்டு, சேதங்கள் குறித்த தனது வருத்தத்தையும், வேதனையையும் பதிவு செய்திருந்தார்.

ஆனால், மத்தியக் குழுக்களின் வருகைக்குப் பின்னரும், மத்திய அமைச்சர்கள் பார்வையிட்டதற்குப் பிறகும், நிவாரணத் தொகை கோரி தமிழக அரசின் சார்பில் இரண்டு கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும், மத்திய அரசிடமிருந்து இதுவரை நிவாரணப் பணிகளுக்கென எந்தவொரு நிவாரணத் தொகையும் பெறப்படவில்லை. இதுபோன்ற இயற்கைப் பேரிடர்கள் மற்ற மாநிலங்களில் ஏற்பட்டபோது, குறுகிய காலத்திற்குள் மத்திய அரசு நிவாரண நிதியினை தேசிய பேரிடர் நிதியிலிருந்து வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், மாநில மக்களின் நலனில் அக்கறை கொண்டு, இரண்டு பேரிடர்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் தற்காலிக சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காகவும், கடுமையாக பாதிக்கப்பட்ட ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திடவும், தமிழக அரசு இதுவரை 2,100 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது.

இதனை கருத்தில்கொண்டு, தமிழக அரசு கோரியுள்ளநிதியை உடனடியாக வழங்குமாறு வலியுறுத்தி, தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்திக்க நேரம் கோரப்பட்டுள்ளது” – என்றுள்ளது.

# தமிழ் எழுத்துக்களால் உருவாக்கப்பட்டுள்ள 25 அடி திருவள்ளுவர் சிலை இன்று திறப்பு

இந்தியாவின் தமிழகத்தில் தமிழ் எழுத்துக்களால் உருவாக்கப்பட்ட 25 அடி உயர திருவள்ளுவர் சிலை இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த சிலையை தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் திறந்து வைக்கவுள்ளார்.

திருவள்ளுவர் சிலை 3 தொன் எடையில் 25 அடி உயரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது.

விசேடமாக, இந்த சிலை முழுவதுமாக தமிழ் எழுத்துக்களால் அமைக்கப்பட்டு நெற்றியில் அறம் என்ற சொல் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கோவை மாவட்டத்தின் பொள்ளாச்சி வீதியின் குறிச்சிக்குளம் பகுதியில் இந்த திருவள்ளுவர் சிலை



அமைக்கப்பட்டுள்ளது.

மாலை வேளைகளில் மின் விளக்குகளால் ஒளிரும் வகையில் இந்த சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. சிலை முழுவதும் உருக்கு இரும்பினால் உருவாக்கப்பட்டுள்ளது.

52 கோடி இந்திய ரூபா செலவில் உருவாக்கப்படும் ‘ஸ்மார்ட் சிற்றி’ திட்டத்தின் கீழ் இந்த சிலை உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடியுடன் அமைச்சர் உதயநிதி சந்திப்பு

டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து பேசியுள்ளார்.

கேலோ இந்தியா போட்டிகள் தமிழகத்தில் நடக்கவிருப்பதை அடுத்து, இதில் பிரதமருக்கு அழைப்பு விடுக்கும் வகையில் அமைச்சர் உதயநிதி நேற்று



நேரில் சந்தித்துள்ளார்.

முன்னதாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் உதயநிதி,

“கேலோ இந்தியா போட்டியின் நிறைவு விழாவில் பங்கேற்க வருமாறு பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுப்பதற்காக டெல்லி செல்கிறேன். பிரதமரைச் சந்திக்கும்போது தமிழக மழை வெள்ளப் பாதிப்புகளுக்கு நிவாரண நிதியை கூடுதலாக வழங்கும்படி வலியுறுத்துவேன்.” என்று கூறியிருந்தார்.

# காசாவில் வீடொன்றின் மீது தாக்குதல்: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் பலி



காசாவின் கான் யூனிஸிஸ் நகரில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கிய இஸ்ரேல் போர் இன்னும் நீடித்து வருகிறது. இஸ்ரேல் ஹமாஸ் தாக்குதலில் நேற்று முன்தினம் ஹமாஸ் அமைப்பின் துணைத் தலைவர் சலே அல்-அரூரி, லெபனானின் பெய்ரூட்டின் தெற்கு புறநகர் பகுதியில், இஸ்ரேலிய ஆளில்லா விமான தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

தற்போது, காசாவில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது என தெரிகிறது. இதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் உள்ள இஸ்ரேலிய தூதரகங்கள் உஷாரப்படுத்தப்பட்டன.

காசாவைச் சேர்ந்த அதிகளவான பாலஸ்தீன பெண்கள், குழந்தைகள் இஸ்ரேலிய சிறையில் உள்ளனர். அவர்களின் பெயர்களையும் இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ளது எனச் சொல்லப்படுகிறது.

இந்த நிலையில், காசாவின் கான் யூனிஸ் அருகே உள்ள ஒரு வீட்டின் மீது இஸ்ரேல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

இந்தப் போரால் 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்து தெற்கு காசாவில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்கள் உணவு, தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் சிரமப்படுகின்றனர் என கூறப்படுகிறது.

ஒக்டோபர் 7 முதல் காசா மீதான இஸ்ரேலியதாக்குதல்களில் 22 ஆயிரத்து 313 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மற்றும் 57 ஆயிரத்து 296 பேர் காயமடைந்துள்ளனர். இஸ்ரேலில் இறப்பு எண்ணிக்கை 1,139 ஆக உள்ளது.

# சிறைத் தண்டனை வழங்கிய நீதிபதியை தாக்கினார் குற்றவாளி



தனக்கு சிறைத் தண்டனை வழங்கிய நீதிபதியை குற்றவாளி ஒருவர் தாக்கிய சம்பவம் அமெரிக்காவில் பதிவாகியுள்ளது.

அமெரிக்காவின் – லஸ் வேகாஸின் மாகாண நீதிமன்றத்தில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நீதிமன்ற வளாகத்தில் உள்ள கெமராவில் இந்த தாக்குதலுடன் தொடர்புடைய காட்சிகள் பதிவாகியுள்ளன.

தாக்குதலுக்கு உள்ளான க்ளார்க் கவுன்ட்ரி மாகாண நீதிபதி மேரி கே. ஹோல்தஸ் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடையவராக கருதப்படும் டேபோரா டெலோன் ரெட்டன் என்ற சந்தேகநபர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என தெரிவிக்கப்படுகின்றது.

இவர் நீதிபதிகள் மீது தாக்குதல் நடத்துவது போன்ற சம்பவங்கள் பல முறை இடம்பெற்றுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

# தடை உத்தரவை இரத்து செய்ய கோருகிறார் ட்ரம்ப்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தடை விதித்து வழங்கப்பட்ட தீர்ப்பை இரத்து செய்ய கோரி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க உச்ச நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுவதற்கு கொலராடோ உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் தடை விதித்தது.

அரசியலமைப்பின் கிளர்ச்சி என்ற வாக்கியத்தை குறிப்பிட்டுக்காட்டி, ட்ரம்ப் ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமான வேட்பாளர் அல்லவென நீதிமன்றம் அறிவித்திருந்தது.

அமெரிக்க அரசியலமைப்பின் 14 ஆவது திருத்தத்தின் 3 ஆவது பிரிவின் கீழ், ஜனாதிபதி வேட்பாளரொருவர் தகுதி நீக்கம் செய்யப்படுவது இதுவே முதல்தடவையாகும்.








# குற்றச் சந்தேகநபரான ஹரக் கட்டாவுடன் 19 பொலிஸ் அதிகாரிகளுக்குத் தொடர்பு?

## புலனாய்வு விசாரணைகள் ஆரம்பமாம்

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட - ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் பாரியளவிலான ஆள் கடத்தல்களில் ஈடுபட்டவருமான ஹரக் கட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்னவுடன் தொடர்பில் இருந்த 19 பொலிஸ் அதிகாரிகள் குறித்து விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரைக்க மைய விசேட புலனாய்வு பிரிவின ரால் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன எனப் பொலிஸ் தலை மையக வட்டாரங்கள் தெரிவித்தன.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் தென் மாகாணத்தில் உள்ள பல்வேறு பதவி நிலைகளில் உள்ள பொலிஸ் அதிகாரி கள் எனத் தெரியவந்துள்ளது. ஹரக் கட்டா தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படாமை குறித்து பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்ன கோனின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்தே இவ்வாறு விசா ரணைகளுக்குப் பணிப்புரை விடுக்கப் பட்டுள்ளது.

ஹரக் கட்டா வெளிநாட்டில் இருந்த போதும், கைது செய்யப்பட்ட பின்னரும் அவர் தலைமையிலான போதைப் பொருள் வலையமைப்புடன் பொலிஸ் அதிகாரிகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பிடியாணை சலுகை களை வழங்க தொடர்பு கொண்டிருந் தார்களா? மற்றும் அவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் விசேட சலுகைகளை வழங்கினார்களா? என்ற கோணத்தில் புலனாய்வு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் பெற்ற லஞ்சப் பணத்தில் வேறு நபர்களின் பெயரில் வாங்கப்பட்ட சொத்து, வாகனங்கள் போன்ற சொத்துகள் குறித்தும் விசா ரணை நடத்தப்பட உள்ளது.

ஹரக் கட்டா விவகாரத்தில் குற்றஞ் சாட்டப்பட்ட சில பொலிஸ் உத்தியோ கத்தர்கள் தமது சேவைக் காலம் நிறை வடைவதற்கு முன்னரே பல்வேறு காரணங்களை முன்வைத்து கஷ்டமான பல பிரதேசங்களுக்கு தாமாக முன்வந்து இடமாற்றங்களை பெற்றுள்ளனர் எனக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள பின்புலத்திலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



# அம்பாறை மாவட்டத்தில் 20 ஆயிரம் பேர் பாதிப்பு

## அரசாங்க அதிபர் சந்தன அபேவிக்ரம தகவல்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை மாவட்டத்திலுள்ள பல இடங்களிலும் மழை மற்றும் வெள்ள நிலைமை காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை யினால் மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலாளர் பிரிவிலும் 5, 944 குடும் பங்களைச் சேர்ந்த 19,959 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர் எனவும், 4 பேர் பலத்த காயத்திற்குள்ளான நிலையில் வைத் தியசாலைகளில் அனுமதிக்கப்பட் டுள்ளனர் எனவும், எந்தவிதமான உயி ரிழப்புகளும் இதுவரை பதிவாகவில்லை எனவும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தந்தன அபேவிக்ரம தெரி வித்துள்ளார்.

மாவட்டத்தில் 143 குடும்பங்கள் தமது குடியிருப்புகளை இழந்துள்ளதுள்ள மையுடன், 2,990 குடும்பங்களைச் சேர்ந்த 10,069 ,பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள னர் எனவும் மாவட்ட திடீர் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள் ளது.



# முள்ளிக்குளம் கடற்படை முகாம் சிப்பாய் நேற்று காட்டில் தூக்கில் சடலமாக மீட்பு

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முள் ளிக்குளம் கடற்படை முகாமில் கடமை யாற்றும் கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை தூக்கில் தொங்கிய நிலை யில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடற்படை முகாமிற்கு வெளியில் உள்ள காட்டுப் பகுதியில் உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இந்தக் கடற்படைச் சிப்பாய் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சிப்பாய் 33 வயது உடை யவர் எனவும் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் தெரிய வந்துள்ளது.

முள்ளிக்குளம் கடற்படை முகாமில் உள்ள கடற்படையினரின் விடுதியில் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் இந்தக் கடற்படைச் சிப்பாய் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்தச் சிப்பாய் கடந்த இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் கடற் படை முகாமில் இருந்து மோட்டார் சைக்கிளில் வெளியில் சென்ற நிலை யில் அவர் மீண்டும் முகாமிற்கு திரும்ப வில்லை எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

தனது கணவர் காணாமல் போனமை குறித்து அவரது மனைவி நேற்று முன் தினம் புதன்கிழமை சிலாபத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தார்.

இந்த நிலையிலே அவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிலாபத்துறை பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.



# வவுனியாவில் எலிக்காய்ச்சல் பரவுகின்றமையால் எச்சரிக்கையாக இருக்க மக்களுக்கு அறிவுறுத்தல்

**(கி.வசந்தரூபன்)**

வவுனியா மாவட்டத்தில் எலிக் காய்ச்சல் பரவுவதால் பொது மக்களை அவதானமாக இருக்குமாறு சுகா தாரப் பிரிவினர் தெரிவித்துள்ள னர்.

வவுனியாவில் தற்பொழுது எலிக் காய்ச்சல் அதிகளவாக பரவுவதனால் பொது மக்கள் அவதானமாக இருக்கு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர் கள். இக் காய்ச்சலானது எலிகளில் இருந்து மனிதனுக்குப்ப பரவும் ஈரமான, சேறு நிறைந்த இடங்களில் வேலை செய்பவர்கள் அல்லது வயல்களில் வேலை செய்வோர் தங்கள் கால்களில் காயங்கள் அல்லது தோல் நோய்கள் இருப்பின் அவதானமாக இருத்தல் வேண்டும். தற்போது பலர் எலிக் காய்ச்சல் காரணமாக பாதிக்கப்பட்டுள் ளனர்.

எனவே, காயச்சல், தலைவலி, உடல் வலி என்பன ஏற்படின் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெறவும். – என அவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக அண்மையில் வவுனியா, செட்டிகுளம், முகத்தான்குளத்தை சேர்ந்த பிரசங்கர் என்ற 22 வயது இளைஞன் எலிக்காய்ச்சல் காரண மாக மரணமடைந்திருந்தமை குறிப் பிடத்தக்கது.



# 2023 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் 82 வீத வரி வருமானம் அறவிடப்படவில்லை

2023 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் அறவிடப்பட வேண்டிய வரி வருமானத்தில் 82 வீதம் அறவிடப்படவில்லை என நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது தெரியவந்தது.

கடந்த ஆண்டுக்கான வரி அறவீடு மற்றும் அதன் செயற்றிறன் தொடர்பில், உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகளின் பங்கேற்புடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் வெளிக்கொணரப்பட்டது.

கடந்த ஆண்டின் முதல் 06 மாதங்களில் அறவிடப்பட வேண்டிய வரி வருமானம் 943 பில்லியன் ரூபா என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த தொகையில் 767 பில்லியன் ரூபாவை பல்வேறு காரணங்களால் அறிவிட முடியாது போயுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.









# நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் ஜன. 23 இல் நாடாளுமன்றத்தில்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று புதிய பொலிஸ் பிரிவொன்றை ஆரம்பித்து வைத்த போதே அவர் இதனைக் கூறினார்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் தொடர்பான யோசனையை சபையில் முன்வைக்க முடியும் எனவும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.





# மின்சார சபையை ஆறாகப் பிரிக்கும் சட்டமூலத்திற்கு தொடர்ந்தும் எதிர்ப்பு

இலங்கை மின்சார சபையை ஆறு பிரிவுகளாகப் பிரிப்பது தொடர்பிலான உத்தேச சட்டமூலத்திற்கு நேற்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தினர் இரண்டாவது நாளாகவும் நேற்று எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

உத்தேச சட்டமூலத்தை மீளப் பெறுமாறு இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

03 நாள்கள் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளனர் என அறிவித்த இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தினர், கொழும்பு கோட்டையிலுள்ள பிரதான அலுவலகத்திற்கு முன்பாக நேற்று பகல் ஒன்றுகூடினர்.

இலங்கை மின்சார சபையின் உத்""தேச சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், இலங்கை மின்சார சபை பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் அபாயம் நிலவுமென அவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், வர்த்தகம், வழங்கல், கொள்முதல் ஆகியவை நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் கீழ் தனித்தனியாக வைக்கப்பட வேண்டும் என்று புதிய வரைவு முன்மொழியப்பட்டுள்ளது.

இது தவிர, மின்சாரத்துறையின் ஒழுங்குமுறை, உரிமம் போன்ற பிரச்சினைகளுக்கு நிறுவனங்களை நிறுவுவதற்கான முன்மொழிவுகளும் இதில் அடங்கியுள்ளன.

இதேவேளை, இலங்கை மின்சார சபை ஊழியர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் சுற்றுநிருபத்திற்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.

மின்சார சபையின் பதில் பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் மேற்படி சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ரயில் கடவை காப்பாளர்கள் வடக்கில் பணிப்பகிஷ்கரிப்பு

வட மாகாணத்தில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் பணிபுரியும் கடவை காப்பாளர்கள் 24 மணித்தியால பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள அதிகரிப்புக் கோரியும், நிரந்தர நியமனத்தை வலியுறுத்தியும் இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ரயில் கடவை காப்பாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பினால் அவதானமாக ரயில் பாதையை கடக்குமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.



# கடல் மார்க்கமான போதைப்பொருள் கடத்தல்: கடந்த ஆண்டில் 343 சந்தேக நபர்கள் கைது!

இலங்கை கடற்படையினரால் கடந்த ஆண்டு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 343 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய 715 கிலோ ஹெரோயின், 3711 கிலோ கேரள கஞ்சா, 50 கிலோ உள்நாட்டு கஞ்சா, 140 கிலோ ஹஷிஸ், 11 கிலோ ஐஸ் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அத்தோடு, 92 ஆயிரத்து 572 கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 18 உள்நாட்டு மீன்பிடி படகுகளுடன் 187 சந்தேக நபர்களும், ஈரான் படகுடன் 5 ஈரான் பிரஜைகளும், பாக்கிஸ்தான் பிரஜைகள் மூவரும், இரு இந்திய படகுகளுடன் 6 இந்தியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சட்ட விரோதமாக விற்பனை செய்வதற்கு வைக்கப்பட்டிருந்த 191 மதுபான போத்தல்களுடன் 8 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தவிர 41 ஆயிரத்து 380 சிகரட்டுக்களும், 1,016,755 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன. 2 ஆயிரத்து 642 மதன மோதகம் எனப்படும் போதை வில்லைகளுடன் 42 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 11 கஜமுத்துக்கள் மற்றும் சட்ட விரோதமாக வெளிநாட்டுக்கு கொண்டு செல்லப்படவிருந்த 14 கிலோ கிராம் தங்கம் என்பவற்றுடன் 3 உள்நாட்டு படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளமையோடு, இவற்றுடன் தொடர்புடைய 11 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதே போன்று கடந்த ஆண்டு சட்ட விரோதமாக கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டு வரப்படவிருந்த 36 ஆயிரத்து 910 கிலோ பீடி தொகையும், 878 கிலோ புகையிலைத் தூளும், 990 கிலோவுக்கும் அதிக மஞ்சளும், 4722 இரசாயன விவசாய திரவியங்களும், 45 ஆயிரத்து 418 அழகு சாதனப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. 60 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவை தவிர ஆள்கடத்தலில் ஈடுபட்ட 5 சந்தேக நபர்களும், சட்ட விரோதமாக இந்தியாவுக்குச் செல்ல முற்பட்ட 9 பேரும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வர முற்பட்ட 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படை ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.















# கம்யூனிஸ்ட், லங்கா சமசமாஜ கட்சியிலிருந்தும் சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவார்கள்

## நளின் பண்டார எம்.பி. நம்பிக்கை

“எதிர்வரும் தினங்களில் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும் சிலர் எம்முடன் இணைவர். அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவிருந்த பல முக்கிய அரசியல் தலைவர்களின் பெயர்களை கட்சி நிராகரித்துள்ளது.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ஐக்கிய மக்கள் சக்தியின் மதிப்பீட்டின் படி எதிர்வரும் ஏப்ரல் அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் பொதுத் தேர்தல் இடம்பெறக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே இவ்வாண்டில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்காவிட்டால் ரணில் – ராஜபக்ஷ அரசாங்கம் வலுவடைவதோடு, வாழ்க்கைச் சுமைகள் மேலும் அதிகரிக்கும்.

எம்முடன் இணைவதற்கு விருப்பம் தெரிவித்த பலரை நாம் நிராகரித்துள்ளோம். இவ்வாறு ஆழமாக சிந்தித்து தூய்மையானவர்களே ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

யார் எம்முடன் இணைந்தாலும் அவர்கள் எமது கொள்கைகளுக்கு அமையவே செயற்பட வேண்டும். மாறாக எம்மால் அவர்களின் கொள்கைகளை ஏற்க முடியாது.

எதிர்வரும் தினங்களில் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்தும் சிலர் எம்முடன் இணைவர். அதற்காக அவர்களின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாதல்லவா?”– என்றார்.



# உடுத்துறையில் கரை ஒதுங்கிய சிலிண்டர் வடிவ மர்மப் பொருள்

(ந.லோகதயாளன்)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை ஒன்பதாம் வட்டாரம் அரசடி முருகன் கோவிலடியை அண்டிய கடல்பகுதியில் ஒர் மர்மப் பொருள் கரை ஒதுங்கியுள்ளது.

சிவப்பு நிறத்திலான சிலிண்டரை ஒத்த பொருளே கரையொதுங்கியுள்ளது. இந்தப் பொருளை பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டு வருகின்றனர். பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சிலிண்டர் வடிவமான பொருளில் 'Asia 2' என பெயரிடப்பட்டுள்ளது.

அண்மைய நாள்களாக உடுத்துறை வேம்படி. நாகர்கோவில், உடுத்துறை கடற்கரையோரங்களில் பல வேறு விதமான மர்மப் பொருள்கள் தொடர்ச்சியாக கரையொதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் இந்த சிலிண்டர் வடிவத்தை ஒத்த பொருள் இரு நாடுகளிற்கு இடையில் எல்லை அடையாளத்திற்காக மிதக்க விடப்படும் மிதவையாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

# ஆயுர்வேத உற்பத்தித் தொழில்துறைக்கு வற் வரியிலிருந்து விலக்களிக்க தீர்மானம்

## சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி அறிவிப்பு



"சுகாதாரச் செலவைக் குறைக்கும் வகையில், ஆயுர்வேத உற்பத்திகள், மருந்துகள் மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பான தொழில்துறைகளுக்கு வற் வரியில் இருந்து விலக்களிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது."

– இவ்வாறு சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இதுவரை நாம் சுதேச மருத்துவத் துறையில் பல சிறந்த சாதனைகளைப் படைத்துள்ளோம். ஆயுர்வேத உற்பத்திகள், மருந்துகள் மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பான தொழில்துறைகளுக்கு வற் வரியில் இருந்து விலக்களிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் மூலம் சுகாதாரச் செலவுகளைக் குறைக்க முடிந்தது.

பாரம்பரிய மருத்துவத்தை பாதுகாக்க விஷேட பிரிவொன்றை நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. பாரம்பரிய மருத்துவத் முறைக்கு ஒரு முறையான நிறுவனம் ஸ்தாபிக்கப்படும் வரை பாரம்பரிய மருத்துவத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் இந்த விஷேட பிரிவு நிறுவப்படவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத சுதேச மருத்துவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கி, அந்த மருத்துவ முறை குறித்து ஆய்வுகள் நடத்தி, முறையான கட்டமைப்பைத் தயாரிப்பதுடன், அந்தத் தொழில்துறை தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் பணிகள் இதன் கீழ் இடம்பெறும்.

அது குறித்து கலந்துரையாடிய பின்னர், திறைசேரிக்கு சுமை ஏற்படாத வகையில் பாரம்பரிய மருத்துவத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு பிரிவை நிறுவுவதற்கு அங்கீகாரம் அளிக்க அமைச்சரவைக்குப் பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள், சுதேச மருந்துகளின் உற்பத்தி மற்றும் உள்நாட்டு மூலிகைச் செடிகளின் விளைச்சலை வணிக ரீதியிலான தொழிதுறையாக தரம் உயர்த்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது வரை வாழ்வாதார அளவில் இருந்த இச் செயற்பாட்டை, இனிமேல் வணிக அளவில் மேற்கொள்ளத் தயாராக உள்ளோம் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மேலும், 'ஆரோக்கியமான குழந்தைகள் திட்டம்' மூலம் சுதேச மருத்துவத் துறையில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களின் பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான மற்றும் மேம்பட்ட கல்வியை வழங்க நாங்கள் எதிர்பார்க்கின்றோம். ஆயுர்வேத சபைகளை வலுப்படுத்துவதும் நமது மற்றொரு நோக்கமாகும். இன்னும் சில மாதங்களில் சுதேச மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் அத் துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் 'ஜனாதிபதி தங்க விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியை நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன" – என்றார்.

# லன்சாவின் புதிய கூட்டணியில் பொது விவசாயிகள் முன்னணி!



இந்த ஆண்டின் இறுதியில் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு புதிய கூட்டணிகளை அமைக்கும் செயல்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் லன்சா ஏற்பாட்டில் உருவாக்கப்பட்டுவரும் புதிய கூட்டணியில் பல்வேறு கட்சிகளையும் அமைப்புகளையும் இணைத்துக்கொள்ளும் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

லன்சாவின் புதிய கூட்டணியில் அகில இலங்கை பொது விவசாயிகள் முன்னணி இணைந்துள்ளது.

புதிய கூட்டணியின் செயற்பாட்டுத் தலைவரும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர பிரியதர்ஷன யாப்பாவுடன் விவசாயிகள் முன்னணியின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் காலை இராஜகிரியவில் உள்ள கட்சி அலுவலகத்தில் விசேட சந்திப்பொன்றையும் நடத்தியுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தின் காலத்தில் பல்வேறு அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிட்டதாக விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.

அதற்குப் பதில் அளித்துள்ள அனுர பிரியதர்ஷன யாப்பா –

"தற்போது நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் பேசுவதும் விமர்சிப்பதையுமேசெய்கின்றன. ஆனால்மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதில்லை.

பொதுஜன பெரமுன செய்த தவறுகள் காரணமாகவே நாம் அதில் இருந்து வெளியேறினோம். நாட்டு மக்களுக்கு புதிய அரசியல் எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் மக்களுக்கு பொய் சொல்கின்றன. அதனால் நாங்கள் அவர்களது கூட்டணியில் இணைய தயாரில்லை." என்றார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளும் கூட்டணிப் பேச்சுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளமையால் ஜனாதிபதித் தேர்தல்களம் சூடுபிடித்துள்ளது.

# மரக்கறி வகைகளின் விலைகள் பண்டிகைக் காலத்தில் உயர்வு!



பண்டிகைக் காலத்தில் அதிகரித்த மரக்கறிகளின் விலைகள் நாளாந்தம் மேலும் உயர்ந்து வருகின்றன எனச் சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த டிசம்பர் மாதத்தில் நிலவிய விலையை விடவும் தற்போது மரக்கறிகளின் விலை 300 சதவீதம் அதிகரித்துள்ளது என மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தம்புள்ளை மற்றும் தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையங்களில் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 1,200 ரூபாய்க்கும், ஒரு கிலோகிராம் கரட் 750 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

அதேநேரம், நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 1,800 ரூபாய்க்கும், ஒரு கிலோகிராம் கரட் 900 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், ஒரு கிலோகிராம் போஞ்சி 600 ரூபாய்க்கும், ஒரு கிலோகிராம் கறிமிளகாய் 900 ரூபாய்க்கும், ஒரு கிலோகிராம் தக்காளி 800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ள நிலையில், பல சில்லறை வியாபாரிகள் மேலும் அதிக தொகைக்கு மரக்கறிகளை விற்பனை செய்து வருகின்றனர் என நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

# தேசிய மட்ட கராத்தே போட்டியில் புத்தளம் மாணவர்களுக்கு தங்கங்கள்

**(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

அகில இலங்கை ஷொடோகன் கராத்தே சம்மேளனத்தின் 22ஆவது வருட நிறைவையொட்டி நடாத்தப்பட்ட தேசிய மட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் புத்தளம் மாணவர்கள் இருவர் தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

இந்தப் போட்டிகள் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றன.

இதில் வசீ ஷொடோக்கன் கராத்தே சங்கத்தின் புத்தளம் கிளையின் மாணவர்களாகிய ஏ.எம்.அஸாம் 21 வயதுக்குட்பட்ட பிரிவிலும், யூ. தாமிர் 15 வயதுக்குட்பட்ட பிரிவிலும் குமித்தே போட்டிகளில் பங்குபற்றி தங்கப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இம்மாணவர்களுக்கான பயிற்சிகளை புத்தளம் டபிள்யூ .எஸ்.கே.ஏ. கராத்தே சங்கத்தின் பிரதான போதனாசிரியரும், பயிற்றுவிப்பாளருமான சிஹான் எம். பெரோஸ் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






# இன்றைய ராசி பலன்கள் - 05.01.2024




இன்று உங்களிடம் காணப்படும் பயம் காரணமாக உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். ஆதனால் உங்கள் முன்னேற்றத்தில் தடை இருக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று மனதை ஒருமுகப்படுத்தி பணியாற்ற வேண்டியது முக்கியம். நீங்கள் தொழில் முறை அணுகுமுறையை பராமரிப்பது நல்லது.

அன்பின்மை காரணமாக குடும்ப நல்லுறவு பாதிக்கப்படும். குடும்பத்திற்கென நேரத்தை ஒதுக்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. உங்கள் செலவினங்கள் அதிகரித்து காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். வயிறு உபாதைகள் நேரலாம்.




இன்று நீங்கள் செய்யும் செயல்களில் கவனம் அத்தியாவசியமாக தேவைப்படும்.

முறையாக பணியை மேற்கொள் நீங்கள் இன்று அனுசரித்து நடக்க வேண்டும். அது உங்களை வளர்ச்சிப் பாதைக்கு அருகில் அழைத்துச் செல்லும்.

சில சம்பவங்களால் மன அமைதி கெடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ பெரியவர்களிடம் ஆலோசனை பெறுங்கள்.

இன்று உங்கள் நிதிகளை பராமரிப்பதில் நீங்கள் மிகவும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரார்த்தனை மூலமாக நீங்கள் நேர்மறை ஆற்றல் பெற முடியும்




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.குழப்பங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும்.இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுபடுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்களுக்கு கால் வலி ஏற்படலாம்.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும். கவனம் மற்றும் சிறப்பான திட்டம் நல்ல பலன் தரும்.

நீங்கள் உங்கள் துணையுடன் விஷயங்களை தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது நிலையான உறவிற்கு நல்லதல்ல. எந்த விஷயத்தையும் லேசாக சாதரணமாக எடுத்துக்கொள்ளுங்கள்.

பணப்புழக்கம் போதிய அளவில் காணப்படாது. இன்று கணிசமான தொகை சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைவு.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மற்றும் யோகா மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் ஏற்படும்.




இன்று அனுகூலமான நாள். இன்று வெளிப்படையாக இருப்பீர்கள். உங்கள் செயல்களில் உறுதியுடனும் நேர்மறையாகவும் இருங்கள்.

உங்கள் பணியை முறையான அணுகுமுறையுடன் கையாள வேண்டும் நேர்மறையான பலன்களைப் பெறுவதற்கு இது மிகவும் அவசியம்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன்மோதல்ஏற்படும்.இதுஉங்களுக்குகவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறை நன்மை தரும்.

தேவையற்ற செலவினங்களை சந்திக்கும் கட்டாயம் உண்டாகும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

நடப்பவைகளை லேசாக எடுத்துக்கொள்வது நல்லது. அதிகமாக யோசிப்பதையும் மிகுந்த உணர்ச்சிவசப்படுதலையும் தவிர்க்க வேண்டும்.




அதிர்ஷ்டகரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிகள்நலம்பயப்பதாககாணப்படும். சலுகைகளும் ஊக்கத்தொகையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். பயனுள்ள வகையிலும் நல்ல செயலுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படுகின்றது. நீங்கள் சுறுசுறுப்பாகவும் தைரியமாகவும் உணர்வீர்கள்.




உங்களின் இனிமையான தொடர்பாடல் மூலம் சாதகமான பலன்களைப் பெறுவீர்கள். உங்கள் வாழ்வில் முன்னேறுவதற்கான வழிகளை இன்று முயல்வீர்கள்.

பணிச்சூழல் சுமுகமாக காணப்படும். நற்பெயரை எடுப்பீர்கள். நீங்கள் பணியாற்றும் விதமும் உங்கள் தொடர்பாடலும் மகிழ்ச்சி தரும் வகையில் காணப்படும். அது உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

உங்களின் இனிமையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். இது அவருடன் உங்களுக்கு நல்லுறவையும் நல்ல புரிந்துணர்வையும் ஏற்படுத்தும்.

இன்று அதிகமான பணம் காணப்படும். விரைவுக் கடன் மூலம் இன்று பணம் உங்களுக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.01.2024




இன்று சாதகமான நாள். புதிய தொடர்புகள் இன்று உங்களுக்கு மிகவும் பயன் தருவதாக அமையும். எண்ணங்கள் பூர்த்தியடைவதற்கான வாய்ப்புகள் உள்ளது.

பணியிடச் சூழ்நிலை உகந்ததாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக இருக்கும். அசௌகரியங்கள் காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.

உங்கள் சமயோஜித புத்தியின் காரணமாக உங்கள் துணையிடம் நல்லுறவைப்பேணி மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன்வெளியிடங்களுக்கு செல்ல வாய்ப்பு காணப்படுகின்றது.

ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் போன்ற வகையில் உங்கள் கடின உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள்.




இன்றைய நாள் கடினமாக இருக்கும். உங்களிடம் பதட்டம் காணப்படும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு சிறந்த பயனளிக்கும்.

பணிகள் அதிகமாகவும் நேரம் குறைவாகவும் காணப்படும். இதனால் உங்களுக்கு பதட்டம் உண்டாகும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையுடன் தேவையற்ற சண்டைகள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்படாமல் தடுக்க அவருடன் அனுசரித்து செல்வது சிறந்தது.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் லட்சியம் அவ்வளவு எளிதானதல்ல. பணம் வந்தாலும் தேவையற்ற செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை பராமரிக்க இயலாது.

பதட்டம் காரணமாக முதுகு வலி ஏற்படலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் நல்ல மனநிலையில் காணப்படுவீர்கள். நல்லது நடக்கும் என்ற உணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் பணியில் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இந்தப் போக்கு உங்களுக்கு அதிர்ஷ்டத்தை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்களுக்கு ஊக்கத்தொகை போன்ற வகையில் கூடுதல் பணம் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப்படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.



